ஜவுளி வியாபாரிகளுக்கு ஓர் நற்செய்தி!
பூகொட
தயாரிப்புக்களின்
பிடவைத்தினுசுகளுக்கு
வடமாகாண ஏக
விநியோகஸ்தர்கள்
ராஜ்கோபால்ஸ்
பூகொட மொத்த,
சில்லறை விற்பனையாளர்கள்
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ2/50

மங்கள வைபவமா?
நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
ராஜ்கோபால்ஸ்
[பட்டுச் சேலைகளின்
காட்சியகம்]
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 சுக்கில ஸ்ரீ சித்திரை மீ 13 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 றமழான் பிறை 19 (26 - 04 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-119

## தளபதிகள் மத்தியில் ராஜீவ் உரை:

# இந்தியத் துருப்புகளை திரும்ப அழைப்பது அவசியமானது

### அமைதிப்படையால் ஏற்பட்ட பலன்கள் பாதிக்காத வகையில் நடவடிக்கை

புதுடில்லி, ஏப்ரல் 26

இலங்கையிலிருந்து, இந்திய இராணுவத் துருப்புகளை திரும்ப அழைப்பது இப்போது அவசியமாகிவிட்டது — இன்றியமையாதது ஆகி விட்டது.

எமது இராணுவத்தினரைத் திரும்ப அழைப்பது குறித்துச் சிந்திக்கும் காலம் வந்துவிட்டது.

அமைதிப் படையின் முயற்சியால் அங்கு உருவாகியுள்ள நல்ல பயன்கள் பாதிக்கப்படாத வகையில் துருப்பு விலகல் அமையவேண்டும்.

— இவ்வாறு பிரதமர் திரு. ராஜீவ்காந்தி கருத்து வெளியிட்டிருக்கிறார்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் இராணுவத் தளபதிகள் மாநாடு நடைபெற்றது. அங்கு பேசுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

விரைவில் இந்திய இராணுவத்தை திரும்பப் பெற்றுக்கொண்டு அங்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள புதிய அரசாங்கம் சட்டம் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள உதவவேண்டும்—என்றும் அவர் சொன்னார். (அ—எ)

## புத்தூர்ப் பகுதியில் சுற்றிவளைத்துத் தேடுதல்!

யாழ்ப்பாணம், ஏப் 26

நேற்று முன்தினம் இரவு புத்தூர்ப் பகுதியில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

மோதலையடுத்து நேற்று புத்தூர்ப் பகுதி தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டது. பலர் தீவிர விசாரணைக்குட் படுத்தப்பட்டனர்.

நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் குலசேகரம் என்ற 21 வயது இளைஞர் காயமடைந்தார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தினால் ஏற்பட்ட பதற்றத்தால் மோட்டார் சைக்கிள்களில் சென்ற இருவர் விபத்துக்குள்ளாகினர். அவர்களில் ஒருவரான கு. தங்கராசா (வயது 49) என்பவர் காயமடைந்தார். (ஒ—9)

### சுற்றிவளைப்பு

திங்கட்கிழமையன்று கச்சாய் பாலாவி உட்பட்ட பகுதிகள் இந்தியப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டன.

சுற்றிவளைப்பின்போது பலர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை வேம்போடு கேணிப் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தையடுத்து நேற்றுக் காலை இத்தாவில் பகுதியில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (அ—117)

## ஏழாலைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

நேற்று ஏழாலைப் பகுதியில் மோதல்சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

இப்பகுதியில் சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் சேத விவரங்கள் குறித்து தெரியவரவில்லை.

### பழம் வீதியிலும்

இதேவேளை நேற்று மாலை யாழ்ப்பாணம் பழம் வீதியிலும் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாக அறிய வந்தது. செய்தி அச்சுக்குப் போகும்வரை மேலதிக விவரங்கள் கிடைக்கவில்லை. (ஒ)

### பளையிலும் மோதல்

யாழ்ப்பாணம், ஏப் 26

நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் பளைப்பகுதியில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. சேத விவரங்கள் தெரியவில்லை.

சம்பவத்தை அடுத்துக் கடைகள் இழுத்து மூடப்பட்டன. அப்பகுதியில் பதற்றம் நிலவியது. [ஒ-9]

### கண்ணிகளை செயலிழக்கப் பயிற்சி பெற்ற

## 4 ஆயிரம் சிப்பாய்கள் தென்பகுதிக்கு விரைந்தனர்

கொழும்பு, ஏப்ரல் 26

நிலக்கண்ணி வெடிகளைச் செயலிழக்கச் செய்வதில் பயிற்சி பெற்ற நான்காயிரம் இலங்கை இராணுவச் சிப்பாய்கள் தென்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றனர்,

இத்தகவலை கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்போது சகல சிப்பாய்களுக்கும் கண்ணிவெடி பற்றிய விசேட பயிற்சிகளும் அளிக்கப்பட்டுள்ளன.

இப்பயிற்சி பெற்ற சிப்பாய்கள் மாத்தறை, அம்பாந்தோட்டை, காலி ஆகிய மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஒரு மாத காலத்தில் தென்பகுதியில் இடம்பெற்ற நிலக்கண்ணி வெடிச் சம்பவங்களில் இருபதுக்கும் அதிகமான இலங்கை ராணுவ, பொலீஸ் வீரர்கள் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ—எ)

## தமிழ் இளைஞருக்கு மாத்தளையில் 'மரணதண்டனை'!

கொழும்பு, ஏப்ரல் 26

மாத்தளையில் கே. பத்மநாதன் என்ற 28 வயது இளைஞர் கடந்த ஞாயிறு இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரின் சடலத்துக்கு அருகில் எழுதப்பட்ட அட்டை ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது.

''இயக்கத்தின் பேரால் வாகனங்களை கடத்தியமைக்காகவும் கொள்ளை, கொலை, போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டமைக்காகவும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது''– என்று அந்த அட்டையில் எழுதப்பட்டிருந்தது.

'மக்கள் நலன் விரும்பிகள்' என்று அட்டையில் உரிமை கோரப்பட்டிருந்தது. [ஒ-எ]

## இறைச்சிக் கடைகள் நிரந்தரமாக மூடப்படுமா?

### தென்பகுதியில் இப்படி ஒரு கேள்வி

கொழும்பு, ஏப். 26

மாட்டிறைச்சி விற்பனை நிலையங்களை நிரந்தரமாக மூடிவிடும்படி தென்பகுதியில் தேசப்பிரேமி ஜனதா வியாபாரய இயக்கம அறிவித்துள்ளதாக சொல்லப்படுகிறது.

மாட்டிறைச்சி விற்பனையை எதிர்ப்பவர்கள் தீவிரவாத இயக்கத்தைச் சம்பந்தப்படுத்தி இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்களோ என்று இறைச்சி வியாபாரிகள் மத்தியில் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

சந்தேகத்தைத் தீர்க்கும்படி கடந்த ஞாயிற்றுக்கிழமை இறைச்சி வியாபாரிகள் பதில் சுவரொட்டிஒட்டியிருந்தனர்.

நிரந்தரமாக மூடப்பட வேண்டும் என்ற எச்சரிக்கையை உறுதிப்படுத்தும்படி டி. ஜே. வி. இயக்கத்தை வர்த்தகர்கள் சுவரொட்டிகள் மூலம் பகிரங்கமாகக் கேட்டு இருந்தனர்.

தீவிரவாத இயக்கத்தின் பதில்கிடைக்கும்வரை இறைச்சிக் கடைகள் மூடப்பட்டு

(6-ஆம் பக்கம் பார்க்க)

## அரசு — விடுதலைப் புலிகள் பேச்சு இன்று அல்லது நாளை ஆரம்பம்

கொழும்பு, ஏப்ரல் 26

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான பேச்சுக்கள் கொழும்பில் இன்று அல்லது நாளை ஆரம்பமாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் கலந்து கொள்ளுவதற்காக திரு. அன்ரன் பாலசிங்கம் எப்போது கொழும்பு செல்வார் என்பதை பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளியிடமுடியாது என்று லண்டனில் விடுதலைப் புலிகள் இயக்கப் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

பி.பி. சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் திரு. அன்ரன் பாலசிங்கம்; ''நிரந்தரமான போர் நிறுத்தம் ஏற்பட்டு, இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்து முற்றாகத் திருப்பி அனுப்பப்பட்டு, இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட மாகாண சபை அமைப்பிலும் மாற்றங்கள் கொண்டு வரப்படவேண்டும்''– என்று கூறினார். (உ—எ)

## கரவெட்டிப் பகுதியில் கொள்ளைகள்; ஒரே இரவில் பல வீடுகளில் கைவரிசை!

கரவெட்டி, ஏப்ரல் 26

நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) இரவு கரவெட்டிப் பகுதியிலுள்ள இரு கிராமங்களில் கொள்ளையர்கள் அட்டகாசம் புரிந்துள்ளனர். கொள்ளையர்கள் தமக்கிடையே ஆங்கிலத்தில் பேசிக் கொண்டனர்.

இரவு சுமார் 10.30 மணியளவில் கரவெட்டி கிழக்கு அத்துளு அம்மன் ஆலயத்துக்குச் சமீபமாகவுள்ள சில வீடுகளில் புகுந்து கொள்ளையர்கள் அங்கிருந்த நகை, பணம் என்பனவற்றைக் கொள்ளையிட்டுள்ளனர்.

அதே இரவு சுமார் 12 மணியளவில் துன்னாலை மேற்குப் பகுதியிலும் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றன.

கந்தசாமி சிவமலர் என்பவருடைய வீட்டிலிருந்து சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது

ஒரு வீட்டில் புகுந்து அங்கி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

சித்திரை - 13

சுபநேரம்;
04.29 முதல் 05.59 வரை
ராகுகாலம்:
11.59 முதல் 01.29 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### இருபாலையில் புதிய முகாம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

பருத்தித்துறை வீதியில் இருபாலைச் சந்திக்குச் சமீபமாக இந்தியப் படையினர் புதிய முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்.

படையினர் முகாம் அமைத்ததை அடுத்து அப்பகுதியிலுள்ள ஒரு சில குடும்பங்கள் வேறிடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளன. (ஒ—10)

## கிளிநொச்சியில் திங்கள் மாலை சூட்டுச் சம்பவங்களினால் பதற்றம்

### 2 பேர் மரணம்; 7 பேர் காயம்

கிளிநொச்சி, ஏப்ரல் 26

கிளிநொச்சி நகரத்தில், திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற அசம்பாவிதங்களினால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

அன்று மாலை 5.30 மணியளவில் நகரம் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களாலும், ஷெல் சத்தங்களாலும் அதிர்ந்தது.

துப்பாக்கிச்சூட்டுப் பிரயோகத்தின் விளைவாக மாணவன் ஒருவனும், அறுபது வயதுப் பெண் ஒருவரும் கொலையுண்டனர், மற்றும் ஏழு பேர் காயமுற்றனர். இவர்களில் நால்வர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டனர்.

திங்கட்கிழமை மாலை சுமார் 5.30 மணியளவில் நடந்த சம்பவம் குறித்து அறிய வருவ

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மீன் கறி சாப்பிட்ட 20 பேருக்கு ஏற்பட்ட கதி!

குருநகர், ஏப்ரல் 26

''போமலின்'' இடப்பட்டதாக கூறப்படும் மீன் கொண்டு சமைத்த கறியை உண்ட இருபது பேர் வாந்தி, பேதி, காய்ச்சல் ஆகியவற்றுக்கு ஆளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் கடந்த 22 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் இணுவில் மைக்கிளியட் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு 24 ஆம் திகதி திங்கட்கிழமை வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட இருபது பேர்களும் ஆனைக்கோட்டை, கூளாவடி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



உந்த நோய் நொடியள் எல்லாம் இறைச்சி. மீன் சாப்பிட வேண்டாம் எண்டு மறைமுகமாகச் சொல்லுமாப் போலையெல்லோ இருக்குது...!

### கடைகளிலும் கொள்ளை!

பச்சிலைப்பள்ளி, ஏப்ரல் 26

சாவகச்சேரி சந்தையில் உள்ள வியாபார நிலையங்களும் திங்கட்கிழமை இரவு கொள்ளையிடப்பட்டன.

காவலாளிகள் இல்லாத மூன்று கடைகளில் திங்கள் இரவு கொள்ளையர் தமது கைவரிசையைக் காட்டி உள்ளனர். (அ—117)

## யாழ். பிரவுண் வீதியிலும் திங்கள் இரவு கொள்ளை!

யாழ்ப்பாணம் ஏப், 26

யாழ்ப்பாணம் பிறவுண்வீதி சிவகுருநாதர் ஒழுங்கையில் பல வீடுகள் திங்கட்கிழமை இரவு கொள்ளையிடப்பட்டன.

இரவு சுமார் 8 - 55 மணி அளவில் மேற்படி ஒழுங்கையில் உள்ள பல வீடுகளுக்குச் சென்ற ஆயுதம் தரித்தவர்கள் வீட்டில் உள்ளவர்களைப் பயமுறுத்தி விட்டு கொள்ளையில் ஈடுபட்டனர்.

வீடுகளில் இருந்தோர் அணிந்திருந்த நகைகள் உட்பட சைக்கிள். டெக், போன்றவையும் கொள்ளையர்களினால் எடுத்துச் செல்லப்பட்டன. (ஒ - 10)

## ★ நேற்றும் வெளிநடப்பு

சென்னை, ஏப். 26

தமிழ்நாட்டில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொல்லைப் படுத்தப்படுகிறார்கள் என்று கூறி அதனை எதிர்த்து அ. தி. மு. க. எம். எல். ஏ. க்கள் நேற்று சட்டசபையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எதிராகப் பொலீஸார் அநீதிச் செயல்களில் இறங்குவதாகவும் அ தி.மு க. எம். எல். ஏ.க்கள் குற்றஞ் சாட்டினர்.

இக்குற்றச்சாட்டினை முதலமைச்சர் கருணாநிதி மறுத்தார். (ஒ—எ)

## செயலகத்தின் சில பிரிவுகள் நேற்று செயல் இழந்தன

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

நேற்று யாழ் செயலகத்தின் தேர்தல் பிரிவு, நிர்வாகப் பிரிவு என்பனவும் பிறப்பு. இறப்புப் பதிவுப் பகுதியும் செயலிழந்தன.

சிவில் நிர்வாக சீல் வைப்பு நடவடிக்கையின் ஒருகட்டமாக செயலகத்தின் சில பிரிவுகள் மட்டுமே இயங்க அனுமதித்திருந்தமையை அடுத்தே மேற்கண்ட அலுவலகங்கள் செயலிழந்திருந்தன என்று அறியப்படுகிறது.

சமூக சேவைப்பகுதி, ஓய்வூதியப்பகுதி, உணவு கட்டுப்பாட்டுப்பகுதி, கணக்கியல் பகுதி என்பன மட்டுமே இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளன. (ஒ—9)

### 857 படையினர் இதுவரை பலி

புதுடில்லி, ஏப்ரல் 26

இலங்கை வடக்கு—கிழக்குப் பகுதியில் இந்திய அமைதிப்படையினருக்கு ஒன்றரை ஆண்டுகளில இதுவரைஏற்பட்ட மொத்த உயிரிழப்பு 857 என்றும்— 2 ஆயிரத்து 236 இந்திய

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த வீட்டுத் தளபாடங்கள், கடைத்தளபாடங்கள், Fan, T. V., Cycle Usha தையல் மெஷின், Cot, மற்றும் பல விற்பனைக்குண்டு. Sorrka 343, பருத்தித்துறை றோட், அரசடி நல்லூர். [10677]

சன்யோ வீடியோ டெக் 14 வீடியோ கசற்றுகள் ரொஷிபா டபிள் கசற் றேடியோ உட்பட பல மின் உபகரணங்கள் வீட்டுத்தளபாடங்கள் விற்பனைக்குண்டு. Frajmal Enterprises 93, Second Cross Street, Jaffna. [C/2340]

## கணிதம்- மயூரதி வெளியீடுகள்

G. C. E (O/L) முன்மாதிரி வினாத்தாள்கள் மயூரதி வெளியீடு- 4, வெளியீடு -5, ஆண்டு 10, ஆண்டு 8, கணிதம் பல் தேர்வு வினாக்கள்' சகலபுத்தக சாலைகளிலும் விற்பனையாகின்றன. சிறந்த கணித நூல்களுக்கு மயூரதி வெளியீடுகள். (10602]

Honda Reconditioned புதிய, பழைய Model C 90, C 70, C 50 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. No: 390, மெயின் வீதி, சுண்டுக்குளி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம். (10667)

## New City Traders

Daytron T. V. 12'', 14'' கறுப்பு வெள்ளை, Daytron T. V. 14'', 20'' கலர், Daytron வீடியோ கசெற், Phillips கசெற் ரெக்கோடர், Phillips Gas cooker மற்றும் வீட்டுக்கு தேவையான மின் உபகரண பொருள்களையும் பெற்றுக்கொள்ள New City Traders, 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/2291)

## வாடகைக்கு

இந்தியா, சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்ட மணமகளின் தலைச்சோடனை மற்றும் நகைகளை வாடகைக்குப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்:கனகசபை தர்மகுலசிங்கம் ''கணேஸ் வாசா''வாரிவளவு சாரைநகர் C/oசித்தி தங்கமாளிகை 213 C கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். [257]

## SPOKEN ENGLISH

Spoken English புதிய பிரிவு சர்வகலாசாலைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் வசதியை முன்னிட்டு, ஆரம்பம் 29-4-89 சனி/ஞாயிறு நாட்களில். நேரம் 2-30—4-00 p.m தொடர்பு:- S. B. Iyar இல. 12, வைமன் வீதி, நல்லூர். (10663)

## உடன் தேவை

யாழ் நகல் பிரபல ஹோட்டல் ஒன்றிற்கு அறைப் பணியாள் [Room boy] தேவை. நல்லொழுக்கமும் 15 வயதுக்கு உட்பட்டவரும் விரும்பத்தக்கது. 27 ஆந் திகதிக்கு முன் நேரில் வரவும். 67, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (10672)

## வகுப்பு

A/L 91 இரசாயனம் 108 Brown Road A/L 91 அடிப்படை இரசாயனம் முதல் வகுப்பு ஆரம்பம். ஆசிரியர் சத்தீஸ் பிரிவு I ஆரம்பம் 2-5-89 செவ்வாய் 6.30 a.m (செவ்வாய், வியாழன் 6.30 a.m) பிரிவு II ஆரம்பம் 30-4-89 ஞாயிறு 11a.m. (சனி ஞாயிறு 11 a.m.) (261)

## TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [C/2124]

## கோழிக்குஞ்சு விநியோகம்

Bairaha Farm புரொயிலர் குஞ்சுகள் திங்கட்கிழமை (24- 4- 89)இலும், Hyline வெள்ளை, கறுப்பு பேட்டுக் குஞ்சுகள், கறுப்புச் சேவற் குஞ்சுகள் செவ்வாய்க்கிழமை (25- 4- 89)இலும் Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் புதன்கிழமை (26-4-89)இலும் விநியோகிக்கப்படும். சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (225)

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளை சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் Hy - line கறுப்பு வெள்ளை, Silver பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய்/ புதன்கிழமைகளில் பெற்றுக்கொள்ளலாம். தடுப்பு மருந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும்கொடுக்கப்படும். C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [சி/2088]

## போக்குவரத்திற்கு வாடகைக் கார் அமர்த்துதல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக போக்குவரத்துத் தேவைகளுக்கு வாடகைக் கார் அமர்த்துவதற்கு பொறியிடப்பட்ட கூறுவிலைகள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

1. ஒரு மைலுக்குரிய போக்குவரத்துக் கட்டணம்
2. ஒரு நாளுக்குரிய தாமதக் கட்டணம் காலை 8 00 மணி முதல் மாலை 4 00 மணிவரை)
3. ஆசன எண்ணிக்கை
4. வாகனத்தின் இலக்கமும் வகையும்

மேற்படி பொறியிடப்பட்ட கூறுவிலைகள் எதிர்வரும் 10-05-89க்கு முன்னர், நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

கூறுவிலைகள் திறக்கப்படும் நேரம் 10-05-89 புதன்கிழமை காலை 10.00 மணி

விண்ணப்ப கடித உறையின் இடது பக்க மூலையில் "TENDER FOR HIRING CAR" என எழுதப்படல் வேண்டும்.

பேராசிரியர் ஏ. துரைராஜா,
உபவேந்தர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

[சி 2236]

## தேவை

விற்பனை (பெண்) பணியாளர்கள் நான்குபேர் தேவை. சைக்கிள் ஓடத்தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பப்பத்திரத்துடன் நேரில் வரவும்.

துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்
பஸ்நிலையம் முன்பாக. —சுன்னாகம்.
(C/2342)

## கூறுவிலைகள் கோரல்

கீழ்க்காணும் தீயணைக்கும் உபகரணங்களை விநியோகித்து அவற்றைப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு பிரிவுகளிலும் பொருத்திக் கொடுப்பதற்கான பொறியிடப்பட்ட கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

1) 27 தொகை CO2
2) 40 '' சோடா அமிலம்
3) 40 '' நீர் CO2
4) 04 '' உலர்ந்த பவுடர் (DRY POWDER)
5) 04 '' போம் (FOAM)
6) 06 '' கம்பியூட்டர் கேலோன்
7) 36 '' தீயணைக்கும் வாளிகள்

விபரப்படுத்தப்பட்ட கூறுவிலைகள் நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 11 - 05 - 89 நண்பகல் 12 மணிக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும்.

கூறுவிலைகள் திறக்கப்படும் நேரம் 11 - 05 - 89 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணி

கடித உறையின் இடது பக்க மூலையில் TENDERS FOR FIRE EXTINGUISHERS'' என எழுதப்படல் வேண்டும்.

வாங்கும் நிர்மாணிக்கும் தீயணைக்கும் உபகரணங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க/ குறைப்பதற்கான அதிகாரம் கூறுவிலைச் சபைக்கு உண்டு.

பேராசிரியர் ஏ. துரைராஜா,
உபவேந்தர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

[சி 2237]

## உடனடியான வேலைவாய்ப்பு

### 1. யப்பான்:

நாங்கள் முன்னர் எடுத்துக்கொண்டு இருந்த கட்டிடப்பகுதி, றெஸ்ரோரன்ட் (RESTAURANT) ஆகிய வெற்றிடங்களுக்குத் தொடர்ந்தும் ஆட்களை எடுத்துக் கொண்டிருக்கின்றோம் தொடர்பு கொள்ள விரும்புவோர் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

(வயது: 20 — 42)

### 2. ஒமான்:

ஆண் தையற்காரர்கள்: கல் பதிப்பவர்கள், மேசன், தச்சுவேலையாள்,ட்றைவர், மின்னிணைப்பாளர், சாரதிகள், பணிப்பெண்கள், கூலியாட்கள் ஆகியோர் உடனடியாகத் தேவை.

(3 வாரங்களில் பயணம்)
( வயது: 19 - 44 )

### 3. குவைற்:

குவைற் நாட்டுக்கு கிளீனர்ஸ் (CLEANERS) வேலைக்கு ஆட்கள் தேவை.

### 4. சவூதி அரேபியா: (Saudi Arabia)

S. O. M. C.

1. மேசன் — MASON
2. தச்சுவேலையாட்கள் — CARPENTERS
3. பிளம்பர் — PLUMBER
4. மின்னிணைப்பாளர் — ELECTRICIAN
5. சாரதிகள் — DRIVERS
6. கூலியாட்கள் — LABOURERS
7. பெயின்ரர் — PAINTERS
8. மெக்கானிக் — MECHANIC

மேற்காட்டிய வேலை விபரங்கள் அறிய விரும்புவோர் எமது ஸ்தாபனத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

**T. V. TRAVELS**
BROWN ROAD,
KOKUVIL
(2355)

## பதவி உயர்வும் நியமனமும்

மட்டக்களப்பு, ஏப்ரல் 26
மட்டக்களப்பு உதவி உள்ளூராட்சி சேவைகள் ஆணையாளர் திரு. இரா. தியாகலிங்கம் மட்டக்களப்பு கச்சேரி மேலதிக அரச அதிபராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

காணிப்பிரிவுக்கு இவர் பொறுப்பாக இருப்பார்.

மாவட்ட சனசமூக உத்தியோகத்தர் திரு. கா. நடராசா பதில் உள்ளூராட்சி உதவி ஆணையாளராக நியமனம் பெற்றுள்ளார். [க-21]

## குறைந்தவிலையில் உர வகைகள்

அராலி, ஏப்ரல் 26
பம்பாய் வெங்காய உற்பத்தியாளர்களின் நன்மை கருதி அராலி கமநல சேவைகள் உப அலுவலகத்தில் உரவகைகள், கிருமிநாசினிகள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. தொல்புரம் பெரும்பாக உத்தியோகத்தர் இதனை ஒழுங்கு செய்துள்ளனர். (க-12)

## வரவேற்பு

புதிய சட்டத்தரணி கே. சண்முகலிங்கத்துக்கு அவரது சொந்த ஊரான மட்டுவிலில் வரவேற்புபசாரம் அளித்துக் கௌரவிக்கப்பட்டது.

சமாதானநீதிவான்டாக்டர் பே. பிலிப்பு தலைமையில்நடைபெற்ற இவ் வைபவத்தில் சட்டத்தரணி திரு. சி. பொ. மயில்வாகனம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

திருவாளர்கள்க. சிவபாலன் க. ஜீவகதாஸ் டாக்டர் எஸ். அருளானந்தம், எஸ். எம்ர் அருளம்பலம் முலானோ சிறப்புரைகள் வழங்கினர். [இ-31]

## மின்பொருள் கொள்வனவுக்கு நடவடிக்கை

ஊர்காவற்றுறை, ஏப்ரல்26
ஊர்காவற்றுறை பிரதேச சபை, இந்த ஆண்டு அதன் உப அலுவலகங்களுக்குத் தேவையான மின்சாரப் பொருள்களையும், மின்சாரத் தூண்களையும் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. யாழ்ப்பாணம்அபிவிருத்திச் சபையிலிருந்து பெறப்பட்ட குறிப்பிட்ட தொகை விதி ஒதுக்கீட்டிலிருந்தும், சபையின் நிதியிலிருந்தும் மேற்படி பொருள்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

பிரதேச சபையின் தலைமை அலுவலக உத்தியோகத்தர் திரு ஏ. சி. இராசதுரை இதனைத் தெரிவித்தார். (க-16)

Thank You St. Jude
For Favours
Granted.
Fabian
[10681]

58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

சனி, ஞாயிறு

10 30 -PURE MATHS
தொகையீடு

11-30 APP. MATHS
வட்ட இயக்கம்

திரு. ஈசன்
B.Sc (Hons)

ஆரம்பம்:
29. 4. 1989
(சி/2334)

## எமது புதிய வெளியீடுகள்!

1. ராஜசேகர், ஜீவிதா
   'கல்யாணி' - (Original)
2. தியாகராஜன். மம்முட்டி
   நியூ டெல்லி (மலையாளம்)
3. கலை இரவு - (மேடை நிகழ்ச்சி)
4. 29, சனி முதல்
   ராமராஜன்,கௌதமி, கவுண்டமணி
   'எங்க ஊரு மாப்பிள்ளை'
   (Original)
5. பார்த்திபன், சீதா
   'புதிய பாதை'

**குணம் வீடியோ சென்ரர்,**
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்,
(சி/2357)

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ.)

சங்கானையில் அமைந்துள்ள மின்தறி நிலையம்

## குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி கோரல்

எமது சங்கத்திற்குச் சொந்தமான 58'' அகலம் கொண்ட 52'' .துணி நெய்யக்கூடிய 15 'மட்சுக்காவா' இயந்திரங்களும், ஒரு நூல் சுற்றும் இயந்திரமும், 1 பாவோடும் இயந்திரமும் கொண்ட மின்தறியாலை குத்தகைக்கு விடுவதற்குக் கேள்விக் கூற்றுக்கள் கோரப்படுகின்றன.

கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) ரூபா 250/-
கேள்விப் பத்திரப்பணம் - ரூபா 50/-

கேள்வி விண்ணப்பம் ஏற்கும் இறுதித் திகதி:
**12. 5. 1989 நண்பகல் 12 மணி வரை.**

கேள்விப் பத்திர விண்ணப்பப் படிவங்கள் சங்கானை ப. நோ. கூ. சங்க அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மின்தறிகளை காரியாலய வேலை நேரங்களில் பார்வையிடலாம். விண்ணப்ப மேலுறையின் இடதுபக்க மூலையில் ''மின்தறியாலைக் குத்தகை'' எனப் போடப்பட்டு அரக்கு முத்திரை இடப்பட்டு ''தலைவர், சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை'' என விலாசமிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும்.எந்த நிலையிலும் கேள்விக்கூற்றை ஏற்கவோ, நிராகரிக்கவோ சங்க இயக்குனர் சபைக்கே அதிகாரம் உண்டு.

பொது முகாமையாளர்,
சங்கானை ப. நோ கூ. சங்கம்,
சங்கானை.
(சி/2356)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**திருமதி சின்னம்மா இராசையா**

மண்ணில்: 07-10-1924
விண்ணில்: 27-03-1989

திருமதி சின்னம்மா இராசையா அவர்களின் மரணச் சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும், வீட்டுக்கு வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், வேறு பலவிதங்களில் உதவியவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

26 04-1989 புதன்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணத்திலும், மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு.
[10679]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்பரிசோதனை நிலையம் ஒன்றை உடனடியாக அமைத்துத் தருக

## கோப்பாய் விவசாயிகள் அமைச்சருக்கு மகஜர்

கோப்பாய், ஏப்ரல் 26
விவசாயிகள் நன்மை கருதி மண்பரிசோதனை நிலையம் ஒன்றை அமைத்துத்தருக.

விவசாயத்துறை அமைச்சருக்கு கோப்பாய் விவசாயிகள் கழகத்தினால் மகஜர் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதில் மேற்கண்டவாறு கோரப்பட்டுள்ளது. மகஜரில் மேலும் கோரப்பட்டிருப்பதாவது:

யாழ் மாவட்ட நிலையத்தில் மண்பரிசோதனை நிலையம் ஒன்றை திருநெல்வேலி கமத்தொழில் ஆராய்ச்சி நிலையத்தில் அமைத்துத் தரும்படி நாம் நீண்டகாலமாகக் கோரிக்கை விடுத்து வருகின்றோம். அது இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

எமது பகுதியில் செம்மண், இருவாட்டிமண், மணல், உவர்மண் ஆகிய வற்றைக் கொண்ட விளை நிலங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறான வித்தியாசமான நிலங்களுக்கு ஒரேவகையான உரவகைகளே பாவிக்கப்படுகின்றன.

இதனால் எமது விவசாயிகள் உரங்கள் மூலமான உச்சப்பயனைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர்.

எனவே மண் பரிசோதனை நிலையம் மிக அவசியமானதாகும்.

இவ்வாறு மகஜரில் மேலும் கேட்கப்பட்டுள்ளது.

1982-89 காலப் பகுதியில் விவசாயிகள் பெற்ற கடன்களை அறவிடமுடியாத கடன்களாக மாற்றும்படியும் மகஜரில் கோரப்பட்டுள்ளது. [இ-72]

முதலாவது

★ பிறந்ததின வாழ்த்து ★



## செல்வன் சிறிரஜிதன்

துன்னாலை தெற்கைச் சேர்ந்த ரவீந்திரன்—அமுதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் சிறிரஜிதன் [26-04-89] இன்று தனது முதலாவது பிறந்த தினத்தை வெகுவிமரிசையாக தனதில்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, பெரியம்மா, அவுஸ்திரேலியாவில் இருக்கும் பெரியப்பா, அக்காமார், அண்ணா, லண்டனில் இருக்கும் அண்ணா, பிரான்சில் இருக்கும் சின்னமாமா குடும்பத்தினர், நல்லூர் ஆசைமாமா குடும்பத்தினர், மாலைதீவு சித்தப்பா, ஜேர்மனி பெரியப்பா, திருநெல்வேலி மாமா, மாமி, அப்பப்பா, அப்பம்மா, அன்ரி அனைவரும் அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணன் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றார்கள். [245]


## உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப்பெறுவதற்கான

## கம்பியூட்டர் கல்வி

DIPLOMA IN DATA PROCESSING AND COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

ஆரம்பம்: 30. 04. 1989
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

சேரும்போது செலுத்தவேண்டியது ரூ. 500/- மாத்திரம்

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி குளிரூட்டப்பட்ட அறையில் (IBM COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும்.

பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள் ஆகையால், விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்துகொள்ளவும்.

விண்ணப்ப முடிவு நாள்: 29 .04. 1989



UNIKCO COMPUTER CENTRE
No. 5, மின்சார நிலைய வீதி,
2 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(உபதபாற் கந்தோர் அருகாமை)

(சி/2303)


## இரத்ததானம்

மானிப்பாய், ஏப்ரல்26
மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர்கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் மகாவித்தியாலயம் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவ மாணவிகள் அண்மையில் இரத்ததானம் வழங்கினர்.

மானிப்பாய் கோவிற்பற்றைச்சேர்ந்த லியோ கழகத்தினர் இரத்ததான வைபவத்தை ஒழுங்குசெய்தனர்.

மானிப்பாய் பொது நூல் நிலைய மண்டபத்தில் வைத்து இரத்ததானம் வழங்கப்பட்டது.

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு ஆங்கிலப் பயிற்சி பெற்று வரும் மாணவமாணவிகளும் இரத்ததானம் வழங்கி உதவினர். [ச-90]

## பயிற்சி நிலையம்

மட்டக்களப்பு, ஏப்ரல் 26
மட்டக்களப்பில் சிவில் தொண்டர் படையின் முதற்கட்ட பயிற்சி நெறிக்கு அண்மையில் 155 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஊறணியிலுள்ள இந்தியப்படை முகாமில் இவர்களுக்கான பயிற்சி நிலையம் அமைந்துள்ளது [க-21]

# எமதுவளத்தைப்பயன்படுத்தி வறுமை ஒழிக்கும் முயற்சி

## யாழ் உ. அ. அதிபர் உரை

குருநகர், ஏப்ரல்26
இன்றைய வறுமை ஒழிப்பு நடவடிக்கைமூலம் எமதுபகுதி வளத்தைப் பயன்படுத்தி வறுமையை அகற்றும் முயற்சியில் ஈடுபட்டுவருகிறது அரசு.

கொழும்புத்துறை, வளன்புரம்ஐக்கியசனசமூகநிலையகட்டடத்தைத் திறந்து வைத்து உரை நிகழ்த்திய யாழ்-உதவி அரச அதிபர் திரு.கா. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வைபவத்திற்கு நிலையத் தலைவர் திரு. மாட்டீன் தலைமை வகித்தார்.

திரு. மாணிக்க வாசகர் மேலும் பேசுகையில்; நாடு சுதந்திரம் பெற்ற நாள் முதல் இன்றுவரை வறுமையை அகற்ற எடுத்த முயற்சிகள் காலத்துக்குக் காலம் பெயர், வடிவங்கள் மாறுபட்டு வந்தாலும் வறுமை நிலை மாறவில்லை. இருந்தபோதிலும் அதற்கான முயற்சிகள் தொடர்கின்றன என்றார்.

மாதர்சங்கச் சார்பில் பேசிய திருமதி தங்கநாயகம் தெரிவித்ததாவது:

'மாதர்களின் முன்னேற்றப் பணிக்கு இன்றைய பங்களிப்பு ஓர் ஆரம்பமே, மாதர் எதிர்கால தொழில் வாய்ப்புகளுக்கு தூண்டுகோலாக இருந்து மக்கள் முன்னேற்றத்துக்கு தம்மை இணைத்துக் கொள்ள முன்வரவேண்டும்.

மாதர்களுக்கு சிறுகைத்தொழில் துறையிலும், சமூகப் பணியிலும், ஆலோசனையும்-ஆதரவும் தந்து ஊக்குவிக்க நல்ல பல நிறுவனங்கள் முன்வர வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

திரு. மாட்டீன் தமது தலைமையுரையில், வளன்புரம் குடியேற்றப் பகுதி 25 வருடம் பழைமை வாய்ந்த போதும் இப்பொழுது நிறுவப்பட்டிருக்கும் ஐக்கிய சனசமூக நிலையம் மிகக் குறுகிய காலத்தில் நிறைவேற்றப்பட்டதானது வளன்புர மக்களின் ஒற்றுமையின் சின்னமாக மிளிர்கிறது. -என்றார்.

ஆசிரியர் சின்னத்துரை, வரதராசா, யாழ். மாநகர சபை சனசமூக நிலையங்களின் மேற்பார்வையாளர் ஆகியோரும் கருத்துரைத்தனர்.

நிலையச் செயலாளர் திரு. நவரத்தினராஜா நன்றி கூறினார். (இ-51)

### கடற் தொழிலாளர் சங்கம் புனரமைப்பு

இராணுவ நடவடிக்கையினால் சேதமடைந்திருந்த பூநகரி கடற் தொழிலாளர் சங்கம் புனரமைக்கப்பட்டுள்ளது. இப் புனரமைப்பு வேலைக்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தானிகராலயம் ரூபா 25, 000 நிவாரணம் வழங்கியுள்ளது

அண்மையில் கூடிய பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் கடற்தொழிலாளர்களுக்கு வேண்டிய அத்தியாவசிய பொருள்களை விற்பனை செய்யும் நிலையம் ஒன்று திறக்க தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் தொழிலாளர்களிடம் இருந்து கருவாடு கொள்வனவு செய்து சந்தைப் படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

முற்றாகப் பாதிப்படைந்த தொழிலாளர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் முகமாக வள்ளங்கள் வழங்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

# சேமிப்புச் சான்றிதழ் திட்டம் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

## அங்குரார்ப்பண வைபவத்தில் துணைவேந்தர் உரை

பருத்தித்துறை ஏப், 26
மக்கள் தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவும் எதிர்காலத்தை சுபீட்சம் நிறைந்ததாக உருவாக்கிக் கொள்ளவும் சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்தவேண்டும்.

இலங்கைவங்கியின் தொடர்ச்சியான ஐம்பது ஆண்டுகால சேவைப் பூர்த்தியை முன்னிட்டு புதிய சேமிப்பு சான்றிதழ் திட்டம் அறிமுகமாக்கப்படுவதுமக்களுக்குகிடைத்த அரிய வரப்பிரசாதமும் இது நாட்டின் அபிவிருத்தி மேம்பாட்டிற்கு வழிகோலும் நடவடிக்கையுமாகும்.

ஐம்பதுஆண்டுகால சேவைப் பூர்த்தியை முன்னிட்டு அறிமுகமாக்கப்பட்ட புதிய சேமிப்பு சான்றிதழ் திட்டத்தை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்து உரையாற்றிய யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஏ.துரைராசா மேற்கண்டவாறு கூறினார்.

விழாவிற்கு பருத்தித்துறை இலங்கைவங்கி முகாமையாளர் திரு. எஸ். மகாலிங்கம் தலைமை வகித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய துணைவேந்தர் பேராசிரியர் துரைராசாகுறிப்பிட்டதாவது

பணத்தைச் சேமித்து வீடுகளில் வைப்பதனால் எந்தவிதமான பயனும் கிடைக்காது. அப்பணத்திற்கு பாதுகாப்பும் இல்லை. பணத்தை வங்கிகளில் சேமித்து வைப்பதனால் மக்கள் கூடிய பயனைப் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் அவர்கள் நாட்டின் அபிவிருத்தி, மேம்பாடுகளிலும் பங்குபற்றியவர்களாகின்றனர்''

இப்பகுதி வங்கிகள் தற்போது மக்களுக்கு கடன் உதவிகளை வழங்காதிருப்பது கவலைக்குரியதாகும். மக்கள் இப்பகுதிவங்கிகளில் சேமிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். ஆனால்வங்கிகளோ மக்களுக்குக் கடன் உதவிகளை வழங்குவதில்லை.

இப்பகுதி மக்களால் சேமிக்கப்படும் பணம் இப்பகுதிகளின் அபிவிருத்திகளுக்குப் பயன்படாமல் போவது பெருங்குறைபாடாகும்.

எனவே வங்கிகள் இப்பகுதி மக்களுக்கும் வேண்டிய கடன் உதவிகளை வழங்க வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் துரிதமாக மேற்கொள்ள வேண்டும்''

இப்படி அவர் கூறினார்.

இலங்கை வங்கி யாழ்மாவட்ட முகாமையாளர் திரு. கே. கணேசமூர்த்தி உரையாற்றுகையில்:

இலங்கை வங்கி வாடிக்கையாளர்களின் நன்மை கருதி பல்வேறு வகையான புதிய திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகின்றது. இப்புதிய திட்டங்களை மக்கள் முழுமையாகப் பயன்படுத்தி வருகின்றனர். இப்புதிய திட்டங்களைமக்கள் முழுமையாகப் பயன்படுத்தி நன்மை அடைய வேண்டும் என்றார்.

விழாவிலே இலங்கைவங்கி யாழ் மாவட்ட கடன் வழங்கு அதிகாரி திரு. எஸ். பாலசுப்பிரமணியம், பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் திரு. எஸ். கமலசேகரம், பருத்தித்துறை இலங்கைவங்கி கடன் வழங்கு அதிகாரி திரு. எஸ். சிவராமலிங்கம் ஆகியோர் உரையாற்றினார்கள்.

பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ரீ. சந்திரசேகரம், கரவெட்டி, உதவி அரச அதிபர் திரு. ஆர். ஐயாத்துரை உட்பட வங்கி ஊழியர்கள் வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டனர்.

பருத்தித்துறை இலங்கை வங்கி பிரதம இலிகிதர் திரு. பீ. ஆனந்தநடேசன் நன்றியுரை வழங்கினர். (இ 118)


## புதிய தொழில் பயிற்சி நெறி

Air condition and Refrigeration

காலம்: 6 மாதம்

புதிய பிரிவு ஆரம்பம்: 29- 04- 1989

விசேட செய்முறைப் பயிற்சிகள் உள்ளடக்கியது.

விபரங்களுக்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, சென். பீற்றர்ஸ் லேன்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (C/2235)

An associate of The Maharaja Organisation Limited
1939-1989
50 YEARS
The courage to be different.

பி. வி. சி. குழாய்கள் வாங்கும்போது
S-Lon எஸ் லோன் என்று கேட்டு
பார்த்து, உறுதிப்படுத்தி வாங்குங்கள்

S-Lon The No.1 PVC pipe



உறுதிக்கும் நீண்டகாலப் பாவிப்புக்கும்
உகந்த பி.வி.சி. குழாய்கள் எஸ் லோன் குழாய்களே
மின்னுவதெல்லாம் பொன்னல்ல
எஸ் லோன் குழாய்களின் தரத்திற்கு வேறெவையும் நிகரல்ல

S-Lon Lanka (Pvt) Ltd.
467, UNION PLACE, COLOMBO - 2. T'PHONE: 596206 — 93716 - 9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னிந்திய யாத்திரைக்கு

எம்மிடம் பதிவு செய்தவர்களில்
ஒரு பிரிவு
**27-4-89 அன்று**
**யாத்திரையை ஆரம்பிக்கின்ருர்கள்.**
அடுத்த பகுதியினர் மிக விரைவில்
செல்ல இருப்பதனுல்
முன் கூட்டியே பதிவு செய்யுங்கள்.

தலைமைப் பணிமனை:

## துர்க்காதேவி ரூர்ஸ்

6. நவீன சந்தை மேல்மாடி,
(மக்கள் வங்கிக்கு அருகாமை)
**யாழ்ப்பாணம்.**

● குறிப்பு:
இந்தியாவில் உயர்கல்வி பயில விரும்பும் மாணவர்களுக்கு சகல வசதிகளுடன் அனுமதி பெற்றுத்தரப்படும்.
விபரங்களுடன் விரைவில்
தொடர்பு கொள்ளவும்.
[சி-2323]


# புனர்வாழ்வு நிவாரணக் கொடுப்பனவு மோசடி:
# அரச ஊழியர் சம்பந்தப்பட்டிருந்தால்
# கடும் நடவடிக்கை

## மட்டக்களப்பு அரச அதிபர் அறிவிப்பு

மட்டக்களப்பு ஏப்ரல் 26

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனர் வாழ்வு அமைச்சின் நிவாரணக்கொடுப்பனவு ரூபா 4 ஆயிரம் விநியோகத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகளில் அரச ஊழியர் எவராவது சம்பந்தப்பட்டது விசாரணையின் போது கண்டு பிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

அரச அதிபர் திரு. கே. செல்வரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊழல் மோசடிகள் இடம் பெற்றுள்ளதாகக் கிடைத்துள்ள புகார்களையடுத்து விசாரணை நடத்துமாறு புனர்வாழ்வு அமைச்சும் மாகாண சபையும் உத்தரவிட்டுள்ளன.

அசம்பாவிதங்களில் பாதிக்கப்பட்டு சுயதொழில்களை இழந்தவர்கள் தொழில்களை இழந்தவர்கள் மீள ஆரம்பிப்பதற்கான கொடுப்பனவுகளை இம் மாவட்டத்தில் இது வரை சுமார் 30 ஆயிரம்பேர் வரை பெற்றுள்ளனர்.

கொடுப்பனவு பெற்றவர்களின் பெயர் விவரப் பட்டியலை பொதுமக்கள் பார்வைக்காக பொது டங்களில் வைக்குமாறு கிராம சேவை அலுவலர்கள் பணிக்கப்பட்டு உள்ளார்கள். இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(க-21)

## கொக்குவில் - சென்றலைட்ஸ்:
## வெற்றி - தோல்வி இல்லை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

கொக்குவில் சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்திற்கும், சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையிலான சினேகபூர்வ கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது.

கொக்குவில் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் தனது ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 218 ஓட்டங்களைப்பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

உமாசங்கர் ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களையும் கிருபானந்தன் 39 ஓட்டங்களையும், மதிதரன் 37 ஓட்டங்களையும், கோகுலன் 32 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றனர்.

ஜி. எஸ். சாந்திகரன் 44ஓட்டங்களை கொடுத்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் தமது ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 260 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டனர்.

டா. புரட்சிதாசன் ஆட்டமிழக்காமல் 58 ஓட்டங்களையும், மனோஜ்குமார் 58 ஓட்டங்களையும், சிவச்சந்திரன் 39 ஓட்டங்களையும், விஜயநாதன் 35 ஓட்டங்களையும், அரசரட்ணம் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

சுதாகரன் 48 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

நேரம் போதாமையினுல் ஆட்டம் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது. (க)

## பருத்தித்துறை மென்பந்து கிரிக்கெட்

பருத்தித்துறை கிரிக்கெட் சம்மேளனத்தினுல் நடத்தப்படும் மென்பந்து கிரிக்கெட் போட்டி தற்பொழுது பருத்தித்துறையில் நடைபெறுகின்றது.

இப்போட்டியில் 8 கழகங்கள் பங்குபற்றுகின்றன.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் பங்குபற்றுவதற்கு புலோலி பென்சன் விளையாட்டுக் கழகமும், வதிரி கலைமகள் விளையாட்டுக் கழகமும் தகுதிபெற்றுள்ளன.

(இ-6)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

யாழ். லயன்ஸ் கழகத்தினுல் தனிப்பட்டோர்களிடையே நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற முதல் மூன்று இலக்கங்கள் கீழ் வருமாறு:

1 ஆவது பரிசில் பெற்ற இலக்கம்: 0220
2 ஆவது பரிசில் பெற்ற இலக்கம்: 0036
3 ஆவது பரிசில் பெற்ற இலக்கம்: 0810

ஆறுதல் பரிசில் பெற்ற பத்து இலக்கங்கள் முறையே பின்வருமாறு:

1808, 0292, 0229, 0016, 0532,
0207, 0067, 1421, 0405, 1715.

மேற்படி இலக்க பரிசில்களை பெறுதற்கு பரிசில் பெற்ற அதிர்ஷ்டசீட்டுடன் எதிர் வரும் வைகாசி மாதம் 15 ஆம் திகதிக்குமுன்பு எஸ். இராஜலிங்கம், காரியதரிசி யாழ். லயன்ஸ் கழகம் 130, 1 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(258)


## BECON

[ஸ்ரீதர் சினிமா முன்பாக]
யாழ்ப்பாணம்.

**A/L 89-90-91**

| | | |
|---|---|---|
| பொருளியல் | - | வரதராஜன் |
| வர்த்தகம் | - | ரட்ணம் |
| கணக்கியல் | - | மரியதாஸ் |
| அளவையியல் | - | S. S. மனோகரன் |
| தமிழ் | - | மீரா |
| இ. நாகரிகம் | - | ஜோதீஸ்வரன் |
| புவியியல் | - | இக்னேசியஸ் |
| அரசியல் | - | சுந்தரமூர்த்தி |

சனி, ஞாயிறு வகுப்புக்கள்
நடைபெறுகின்றன.
[C/2330]



## CHARTERED ACCOUNTANCY EXAM

LICENTIATE I Sept - 1989
வகுப்புகள் ஆரம்பம்:
**29 April 1989.**
CONTACT:
**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, St. Peters Lane,
Hospital Rd,
JAFFNA.
(C/ 2233)



## ★ NEW BECON ★

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சித்திராலயா ஸ்ருடியோவிற்கு முன்பாக)

## கலை, வர்த்தகம்

**A/L 90, 91** சனி, ஞாயிறு வகுப்புக்கள்
புதிய பிரிவுகள்

பொருளியல்: வரதராஜன்
வர்த்தகம்: பிரபல விரிவுரையாளர்
கணக்கியல்: யோகராஜா அளவையியல்: S. S. மனோகரன்
இந்துநாகரீகம்: ஜோதீஸ்வரன் தமிழ்: குழந்தை
**ஆரம்பம்: 29-04-1989**
சனி 10.00 a.m
[சி-2327]


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**செபஸ்தி யேசுதாசன் (சீலன்)**

அன்னை மடியில்: 20 - 07 - 1947
ஆண்டவன் அடியில்: 28 - 03 - 1989

எம்மில் ஒருவராய் வந்துதித்து
வாழ்வின் தத்துவத்தை வாழ்ந்து காட்டி
வறியவர்க்கும் வாடியோர்க்கும்
வாரி வாரி வழங்கிய தரும சீலனே
சீலராய் நாம் வாழ வழி காட்டி விட்டு
எம் கண்ணிலிருந்து மறைந்து சென்ருயோ?
உம் தியாக உள்ளத்தை நாம் மறப்போமோ!
உம் உயர்ந்த பண்புகளை நாம் வாழாதிருப்போமோ?

அன்பனின் இறுதிச் சடங்கிலும், திருப்பலியிலும் பங்கு கொண்டு மன்ருடிய அன்பர்களுக்கும், உதவி புரிந்தவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பி எம் துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் நன்றி கூறுகின்ரேம். இயேசுவின் உயிர்ப்பின் அமைதியில் அவர் இளைப்பாற 27 - 04 - 89 காலை சிலாவத்துறையிலும், வங்காலையிலும், 03 - 05 - 89 புதன் காலை 6.15க்கு நாவாந்துறை புனித பரலோகமாதா ஆலயத்திலும் ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியில் பங்கு கொண்டு மன்ருடும்படி அன்புடன் கேட்கின்ரேம்.

மனைவி, பிள்ளைகள்,
தாய், சகோதரங்கள், மாமி.

57, நாவாந்துறை,
யாழ்ப்பாணம் [10659]

## JOLLY STARS SPORTS CLUB
WITH
## SHABRA UNICO FINANCE LTD.
CALLING
all Cricket Clubs in the Jaffna District
FOR THEIR
## 3rd ANNUAL LIMITED OVERS
## CRICKET TOURNAMENT
FOR
## The SHABRA TROPHY

Entries Close at 12-00 noon
Draw at 4-00 p. m. } ON WEDNESDAY 3rd MAY, 1989

Collect your Entry Forms and Tournament Rules
from

| | | |
|---|---|---|
| K. Poopalasingam | N. Somasuntharam | Shan. Johnson |
| Uthayan Advertisement Branch | 45, College Road, | 57, Maruthady Road, |
| No. 15, Second Lane, | Jaffna. | Jaffna. |
| Power House Road, Jaffna. | | |

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
அந்தியேட்டி அழைப்பும்



**திரு. V. K. ஆறுமுகம்**
[Retd. S. P.]

மண்ணுலகில்: 19- 08- 1911
முருகன் அடியில்: 28- 03- 1989

பாசத்தின் திருவிளக்காய்த் திகழ்ந்த குடும்பத்தின் ஒளிவிளக்கே! அன்பின் பிறப்பிடமே! எம்மை அன்பால் வளர்த்த ஆருயிரே! உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்ரேம்.

27- 4 89 வியாழக்கிழமை அன்ருரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்தில் உற்ருர், உறவினர், நண்பர்கள் குடும்பசகிதம் வருகைதந்து, மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்ரேம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், குடும்பத்தினர்.

"மீரு பவனம்"
கரவெட்டி. (10675)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யா மொழி

**குறள்:**
உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார்.

**பொருள்:**
கள்ளின்மேல் விருப்பம் கொண்டு நடப்பவர், எக்காலத்திலும் பகைவராலும் அஞ்சப்படார்; தமக்குள்ள புகழையும் இழந்து விடுவர்.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073
26 04 - 1989 இல 23


## புதிதாக மத்திய நூல் நிலையம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு ஆறு லட்சம் ரூபா பெறுமதியான நூல்கள் அன்பளிப்பாகக் கிடைத்துள்ளன. அமெரிக்கா அந்த நூல்களை வழங்கி உள்ளது.

வெளிநாட்டுத் தூதுவர்கள், ஏனைய ராஜதந்திரிகள் தமிழ்ப் பகுதிகளுக்கு வருவதற்குத் தயக்கம் காட்டும் ஒரு காலத்தில், யாழ்ப்பாணத்திற்கு வந்து நூல்களை அன்பளிப்புச் செய்திருக்கிறார் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவர் திரு. ஜேப்ஸ் ஸ்பெயின்.

நூல்கள் கிடைத்திருக்கின்றன; அவற்றைத் தகுந்த முறையில் வைத்துப் பாதுகாப்பதற்கும் போதிய வசதிகள் உள்ள நூல்நிலையம் உண்டா? கிடைத்த பெறுமதி மிக்க நூல்களை வாசகர்கள் முழு அளவில் பயன்படுத்துவதற்கு வசதியான நூல்நிலையம் உண்டா?

யாழ்ப்பாண வாசகன் ஒவ்வொருவன் மனதிலும் மேற்கண்ட கேள்விகள் இயல்பாகவே எழும் என்பதில் ஐயமில்லை. காரணம்; யாழ்ப்பாண மாவட்டத்தின் அறிவுக் களஞ்சியமாக விளங்கிய வசதிகள் கொண்ட யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலையம் இப்போது இல்லை; அது இப்போது இயங்குவதில்லை.

1981 ஆம் ஆண்டில், பலகோடி ரூபா பெறுமதியான, தேடற்கரிய நூல்களுடன் அந்த அறிவுப் பெட்டகம் எரிக்கப்பட்டதை ஆண்டுகள் நூறு கழிந்தாலும் ஈழத் தமிழர்கள் மறந்துவிட மாட்டார்கள்!

அது ஈழத் தமிழர்களின் பண்பாட்டுப் படுகொலைகளில் முதன்மையானது; மிகப்பிரதானமானது. அந்தப் பண்பாட்டுப் படுகொலையைப் பார்த்துக் கொண்டு வாளாதிருக்கக் கூடாது என நினைத்து யாழ்ப்பாணம் பொது நூலகத்தை மீள்விக்க, புனரமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அந்த வகையில் 1984 ஆம் ஆண்டில் மீள்விப்பு முயற்சிகள் நடந்தன. இழந்த நூல்களை ஈடு செய்யும் விதத்தில் புதிதாக நூல்களை வழங்கவும், நிதி உதவி செய்யவும் வெளிநாடுகளில் உள்ள அபிமானிகள், நிறுவனத்தினர்களும் விருப்பம் தெரிவித்திருந்தனர்.

ஆயினும் 1984 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தமிழர்களின் பாதுகாப்பு நிலைமை மேலும் மோசமடையவே, யாழ் பொதுசனநூலகம் மேன்மேலும் பாதிப்புக்கு உள்ளாகி முற்றாகப் பாவிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

நூலகம் பாதுகாப்புப் பிரதேசத்திற்குள் முடங்கியது மட்டுமன்றி, பயன்படுத்த முடியாத அளவுக்கு கட்டடங்களும் முற்றாகச் சேதமடைந்துள்ளன. மொத்தத்தில் புதுக்கியோ, திருத்தியோ பயன்படுத்த முடியாத நிலையில் பழைய நூலகம் உள்ளது.

யாழ்ப்பாண நகர மக்களின் நூலகத் தேவையை ஓரளவேனும் பூர்த்தி செய்யும் விதத்தில், மாநகர சபை எல்லைக்குள் நூலகக் கிளைகள் ஆறு [உப நூலகங்கள் என்றும் கூறலாம்] இயங்குகின்றன. அவை பொதுசன நூலகம் போன்று போதிய வசதிகளுடன், நூல்களுடன் இயங்கவில்லை என்பது கண்கூடு. அப்படி ஆறு அல்ல அறுபது நூல்நிலையங்கள் இயங்கினாலும் அழிந்தொழிந்து போன பொது நூலகத்துக்கு நிகராக முடியாது.

எனவே யாழ்ப்பாண நகர மக்களினது தேவையை மட்டுமன்றி குடாநாட்டு மக்கள் சகலரதும் நூல் நிலையத் தேவையைக் கருத்திற் கொண்டு பூரண வசதிகளுடன் கூடிய மத்திய பொது நூல்நிலையம் ஒன்று தேவை. வேண்டுமானால் குடாநாடு முழுவதிலும் மேலதிகமாக ஒவ்வொரு பத்து மைல் பிரதேசத்திற்கும் ஒவ்வொரு உப நூல் நிலையத்தை அமைக்கலாம். இப்போது கிராம மட்டத்தில் உள்ள வாசிகசாலைகள், நூல்நிலையங்களையும் விரிவுபடுத்தலாம்.

எப்படியாயினும், யாழ்ப்பாண நகரில் பொதுசன மத்திய நூலகம் ஒன்றைப் புதிதாகக் கட்டி அதனை நூல்கள் நிறைந்ததாக்குவது மிகவும் அவசியமாகும். அழிந்துபோன பொதுசன நூலகத்தைவிட தரத்திலும், வசதிகளிலும் மேலும் சிறந்ததாக அதனை அமைக்க வேண்டும். ஒற்றுமையுடன் முயற்சித்தால், முடியாதது என்று எதுவும் இருக்க முடியாது.

## சரியான திட்டம் இல்லாவிடின் அபிவிருத்தி வேலைசெய்ய முடியாது

### உதவி உள்ளூராட்சி ஆணையாளர் உரை

ஊர்காவற்றுறை, ஏப். 26

தற்போது இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிக்கு அபிவிருத்தி வேலைகளுக்காகவும், புனர் நிர்மாண வேலைகளுக்கும் நிதி வழங்க அரசு நிறுவனங்களும் ஏனைய வெளிநாட்டு நிறுவனங்களும் தயாராக உள்ளன, ஆனால் எம்மிடம் சரியான திட்டங்கள் இல்லாததால் உடனடியாக அபிவிருத்தி வேலைகளைச் செய்ய முடியாமல் உள்ளது. இதனால் வரக் கூடிய நிதிகள் திரும்பிப் போகவும் செய்கின்றன.

யாழ்ப்பாண பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ். எஸ். திவகலாலா தமது அலுவலகத்தில் நடத்திய தொழில் நுட்ப உத்தியோகத்தர்களின் கருத்தரங்கில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் இக் கருத்தரங்கில் பங்கு கொண்டனர். (க-16)

## ஐரிஷ் விடுதலைப் போராளிகளுக்கு தென் ஆபிரிக்காவின் ஆயுதங்கள்

### -பிரிட்டிஷ் பிரதமர் கவலை

லண்டன், ஏப்ரல் 25

வட அயர்லாந்து தீவிரவாதிகளுக்கு தென் ஆபிரிக்கா ஆயுதங்கள் வழங்கி வருவது குறித்து பிரிட்டிஷ் பிரதமர் மார்கரட் தாட்சர் கவலை தெரிவித்தார்.

பிரிட்டனிடமிருந்து ஏவுகணைகளை இரகசியமாகப் பெற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் ஆயுதங்களை வட அயர்லாந்து கெரில்லாக்களுக்கு தென் ஆபிரிக்கா வழங்கி வருவதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

அது மட்டுமல்ல விமான எதிர்ப்புத் துப்பாக்கி ஒன்றை பாரிஸில் வைத்து தென் ஆபிரிக்காவின் ராஜதந்திரி ஒருவரிடம் கையளிக்கையில் இரண்டு ஐரிஷ் தீவிரவாதிகள் கைதும் செய்யப்பட்டனர்.

இவற்றைத் தொடர்ந்து பிரிட்டிஷ் பிரதமர் தென் ஆபிரிக்க நிதி அமைச்சரை நேற்று லண்டனில் சந்தித்துத் தனது கவலையை வெளியிட்டார்.

இதற்கு முன்னர் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர், லண்டனில் உள்ள இதன் ஆபிரிக்கத் தூதரை அழைத்து விளக்கம் கோரியிருந்தார்.

கெரில்லாக்களுக்கு தென் ஆபிரிக்க அரசு ஆயுதங்கள் வழங்குவது பற்றி வட அயர்லாந்து அரசும் கவலை தெரிவித்துள்ளது.

இது பற்றிய விசாரணை ஒன்றுக்கும் ஐரிஷ் அரசு உத்தரவிட்டிருக்கிறது.

ஆயுதங்களை வழங்கவில்லை என்று தென் ஆபிரிக்க வெளியுறவு அமைச்சர் பிக்போத்தா தெரிவித்திருக்கிறார். (எ)

## ஊழல் மோசடிக் குற்றச்சாட்டு; ஜப்பானிய பிரதமர் இராஜினாமா!

டோக்கியோ, ஏப்ரல் 25

ஜப்பான் பிரதமர் தாகஷிடோ இராஜினாமாச் செய்யப் போவதாக அறிவித்திருக்கிறார்.

சில மாதங்களாக ஜப்பான் அரசியலை ஆட்டிப்படைத்து வரும் ரெக்ரூட் வெளியீட்டகத்தின் ஊழல் நடவடிக்கைகள் பற்றிய விஷயத்தில் அரசியல் ரீதியான பொறுப்பைத் தான் ஏற்று இராஜினாமாச் செய்வதாக அப்போது பிரதமர் அறிவித்தார்.

இந்த ஊழல் மோசடி அம்பலமானதைத் தொடர்ந்து 3 சிரேஷ்ட அமைச்சர்கள் (நிதி அமைச்சர் உட்பட) இராஜினாமாச் செய்து விட்டனர். வேறு பலர் கைதாகி கிரிமினல் குற்றங்களுக்காக விசாரிக்கப்படவுள்ளனர்.

## பளபளப்பாக மின்னும் எம்.ஜி.ஆர் துரோகிகள் விரைவில் பொசுங்கப் போகிறார்கள்!

### வீரப்பன் ஆவேசம்

சென்னை, ஏப்ரல் 25

துரோகிகளை எம். ஜி. ஆர் ஆத்மா மன்னிக்காது. எம். ஜி. ஆரின் உணர்வுகளையும், எண்ணங்களையும், கொள்கைகளையும், செயல்பாடுகளையும் மாற்றியும் குறைகூறியும் வரும் எவரையும் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று முன்னாள் அமைச்சர் ஆர். எம். வீரப்பன் கூறினார்.

முன்னாள் அமைச்சர் ஆர். எம். வீரப்பன் மேலும் பேசியதாவது:-

எம். ஜி. ஆரிடம் எத்தனையோ பேர் பெரிதும் பயன் பெற்றார்கள். ஆனால் அதில் அதிகம் பேர் அவர் மறைந்த பின் மாறிவிட்டார்கள்.

எம். ஜி. ஆரின் உணர்வுகளையும், எண்ணங்களையும், கொள்கைகளையும், செயல்பாடுகளையும் மாற்றிப் பேசியும் குறைகூறியும் வருபவர்களை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். விரைவில் நல்ல பாடம் கற்பிப்பார்கள்.

துரோகத்தால் கட்சியைப் பிளந்தார்கள். இன்று துரோகிகள் கைகோர்த்துக் கொண்டு செல்கின்றனர். அதற்கு விரைவிலே முடிவுநாள் வரும்.

துரோகத்தால் உருவாக்கப்பட்ட கட்சிகள் நீண்டநாள் நிலைப்பதில்லை. மக்கள் உண்மைகளைப் புரிந்து கொள்ளும் சக்தி படைத்தவர்கள்.

ஜானகி விஷம் வைத்து எம். ஜி. ஆரைக் கொன்று விட்டார் என்றும், எம். ஜி. ஆரின் கோடிக்கணக்கான சொத்துக்களையும், பணத்தையும் ஜானகி பதுக்கி வைத்துள்ளார் என்றும் அபாண்டமாகக் கூறியவர்கள் எப்படி ஜானகியுடன் இணைந்தார்கள் என்பது புரியாத புதிராகும்.

இன்று பளபளப்பாக மின்னி பகட்டாகத் தெரியும் இந்த எம். ஜி. ஆரின் துரோகிகள் விரைவில் மக்கள் மத்தியில் பொசுங்கப் போகிறார்கள்.

ஒரு தலைவரிடம் உண்மையை விடவும், விசுவாசமாக இருப்பதே சிறந்த தொண்டனுக்கு அழகு அதை எம். ஜி. ஆர் துரோகிகள் மறந்து விட்டனர்.

இவ்வாறு ஆர். எம். வீ. பேசினார். (எ-4)

## ★ தலையீடு தொடருமானால்

## பாகிஸ்தான் மீது தாக்குதல்; ஆப்கன் அரசு எச்சரிக்கை!

ஐ நா. ஏப்ரல் 25

ஆப்கன் அரசுப்படைகளின் எதிர்த் தாக்குதலை பாகிஸ்தான் விரைவில் எதிர்நோக்க வேண்டியேற்படும் என்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

ஆப்கன் வெளியுறவு அமைச்சர் அப்துல் வாக்கில் ஐ. நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

ஆப்கனிஸ்தான் நிலைமை பற்றி ஐ நா. பாதுகாப்புச் சபை விவாதித்து வருகிறது.

இக்கூட்டம் திங்கட்கிழமை முடிவடைகிறது.

பாகிஸ்தான் இராணுவ ரீதியில் ஆப்கன் மண்ணில் இருந்து கொண்டு கெரில்லாக்களுக்கு உதவி வருவதாக ஆதாரங்களுடன் அமைச்சர் வாக்கில், பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் விவரித்தார்.

ஜலலபாத் நகர் மீதான தாக்குதலை நடத்தும்படி கெரில்லாக்களுக்கு பாகிஸ்தானே உத்தரவிட்டதாகவும் அவர் தெரிவித்தார். [எ]

### ஒலிம்பிக் கமிட்டி அனுமதி வழங்கியும்

## 1992 ஒலிம்பிக்கில் பங்குபற்ற பென் ஜோன்ஸனுக்கு தடை

### கனடா அரசு அறிவிப்பு

ஒட்டாவா, ஏப்ரல் 25

1992இல் ஸ்பெயின் நாட்டில் பார்சிலோனியாவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளிலும் பென்ஜோன்ஸனை அனுமதிக்கப் போவதில்லை என்று கனடா அரசு அறிவித்து விட்டது.

1988 சோல் ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் கலந்து கொண்டு 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் தங்கப் பதக்கம் பெற்றவர் பென்ஜோன்ஸன்.

போதைவஸ்து பாவித்துவிட்டு பந்தயத்தில் கலந்து கொண்டார் என்பது கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவரிடம் இருந்து தங்கப்பதக்கம் பறிக்கப்பட்டது.

ஆயுள்காலம் வரை ஒலிம்பிக் போட்டி உட்பட சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொள்ள ஜோன்ஸனுக்கு கனடா அரசு தடை விதித்தது.

அத்தடை நீடிக்கும் என்று கனடா விளையாட்டு அமைச்சர் நேற்று அறிவித்தார்.

இரண்டு ஆண்டுகள் தடை விதித்த ஒலிம்பிக் சங்கம், 1992 ஒலிம்பிக்கில் பென் ஜோன்ஸன் கலந்துகொள்ள முடியும் என்று அறிவித்தது.

அது பற்றி கேட்டபோதே கனடா அரசு முன் கண்ட அறிவிப்பை வெளியிட்டது. (எ)

## ஜோர்தான் பிரதமர் இராஜினாமா

அம்மான், ஏப்ரல் 25

ஜோர்தான் பிரதமர் ஜைத் அல்ரிபாய் நேற்று இராஜினாமாச் செய்தார்.

கடந்த சில தினங்களாக இடம் பெற்ற அரசுக்கு எதிரான வன் செயல்களைத் தொடர்ந்து பிரதமர் பதவியை ஜைத் ரிபாய் நேற்று மன்னர் ஹுசேனிடம் சமர்ப்பித்தார்.

விலைவாசி உயர்வைக் கண்டித்து மக்கள் ஜோர்தானின் பல நகரங்களில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அப்போது ஏற்பட்ட மோதலில் 8 பேர் வரை உயிரிழந்தனர் என்பது தெரிந்ததே. (எ)

## யாழ்ப்பாணத்தில் அமெரிக்க நூல் நிலையம்

## மாணவருக்குப் புலமைப் பரிசில

## நிலைமை சீரடையும் போது ஆலோசிக்கப்படும் என்கிறார் அமெரிக்கத் தூதுவர் ஸ்பெயின்

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்ப்பாணத்தில் ஓர் அமெரிக்கத் தகவல் நிலைய நூலகம் அமைக்கப்பட வேண்டும் என்றும் மாணவர்களுக்கு அமெரிக்க புலமைப் பரிசில்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் இங்கு கோரிக்கை விடுவிக்கப்பட்டதும் இங்கு நிலைமை சீரானதும் இக் கோரிக்கைகள் பற்றி ஆராயப்படும்.

நல்லூர் இந்து கலாசார மண்டபத்தில் யாழ். மாநகர சபை நூலகத்துக்கு ஆறு லட்சம் ரூபா பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்த வைபவத்தில் உரையாற்றுகையில் அமெரிக்க தூதுவர் திரு. ஜேம்ஸ் டபிள்யூ ஸ்பெயின் மேற்கண்டவாறு கூறினார்.

விழாவுக்கு கிளிநொச்சி அரசாங்க அதிபரும் முன்னைநாள் யாழ். மாநகரசபை விசேஷ ஆணையாளருமான திரு. அன்ரன் அல்பிறட் தலைமை வகித்தார்.

அமெரிக்க தூதுவரும் அவரின் கோஷ்டியினரும் சரியாக மாலை 3 மணிக்கு நல்லூர் இந்து கலாசாரமண்டபத்தில் வந்திறங்கிய பொழுது அவர்களைத் திரு. அன்ரன் அல்பிறட் யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் ஆகியோர் மாலை சூட்டி வரவேற்றனர்.

இந்து கலாசார முறைப்படி அமெரிக்க தூதுவர் மங்கள விளக்கேற்றி வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்.

அமெரிக்கத் தூதுவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

உங்கள் மொழி, கலாசாரத்தை எனது நாட்டு மக்கள் பெரிதும் மதிக்கின்றனர். உங்களுக்கும் எங்களுக்கும் இடையே பரஸ்பர நல்லுறவும் கருத்துப் பரிமாற்றங்களும் நிகழவேண்டும்.

நான் இங்கு புத்திஜீவிகள் மத்தியில் உரையாற்றுவதையிட்டுசந்தோஷமடைகிறேன். யாழ்ப்பாண நூலகத்தின் தேவைகளைப் பற்றி ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பதாக எமக்குக் கூறப்பட்டது. இன்று தான் அக் கைங்கரியம் கைகூடுகிறது.

உங்கள் அறிவகமான யாழ்ப்பாண நூல்நிலையத்திற்கு ஆறு லட்சம் ரூபா பெறுமதியான நூல்களை எம் நாட்டு மக்கள் சார்பில் அன்பளிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இப்படி அவர் கூறினார்.

திரு. அன்ரன் அல்பிறட் தனது தலைமை உரையில் கூறியதாவது:

அமெரிக்க தூதுவர் திரு. ஸ்பெயின் தமது நாட்டு மக்களின் அனுதாபத்தை எமக்கு உணர்த்தி எங்கள் விசனங்களில் அவர்களும் பங்கு கொள்ளுகிறார்கள் என்பதை தெரிவிக்கவே இங்கு வந்துள்ளார்.

அமெரிக்க மக்கள் வடக்கு கிழக்கு மாகாண புனரமைப்புக்கும் எமது நாட்டின் விவசாய நீர்ப்பாசன அபிவிருத்திக்கும் பெரும் தொகையான பண உதவி புரிந்துள்ளனர்.

எமது நூலகத்திலிருந்து அழிந்துபோன ... களின் இடத்தை நிரப்புவதற்கு அமெரிக்கா அளித்த உதவியை நாம் மறக்க முடியாது.

இன்று அவர்கள் அன்பளிப்புச் செய்துள்ள நூல்களை நாங்கள் சிறந்த முறையில் பிரயோசனப் படுத்த வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

யாழ். பல்கலைக்கழக கல்வி பீடத்தைச் சேர்ந்த திருமதி குணேஷ் பரராஜசிங்கம் பேசுகையில் யாழ்ப்பாணத்தில் அமெரிக்கத் தகவல் நிறுவன நூலகம் ஒன்றை அமைக்குமாறும் தமிழ் மாணவர்கள் அமெரிக்காவுக்குச் சென்று கல்வி கற்பதற்கு ஏதுவாக அமெரிக்க புலமைப் பரிசில்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

திரு. கே. நேசையா தனது நன்றி உரையில்; யாழ். மாநகரசபை எல்லைக்குள் இன்று ஆறுக்கு அதிகமான யாழ். மாநகரசபையினால் பரிபாலிக்கப்படும் நூல் நிலையங்கள் இருக்கின்றன என்றும் நூலகங்கள் மூலமே மக்களின் அறியாமையைப் போக்கி நாட்டில் சமாதானத்தை நிலைநிறுத்த வழிவகுக்கலாம் என்றும் கூறினார். (ச)

## பள்ளி முன் கல்வியே கல்வியின் அத்திவாரம்

### பிரதிக் கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்

உண்மையான கல்வியின் அத்திவாரம் பள்ளி முன் நிலையிலேயே பேணப்பட வேண்டும். வளர்ச்சி அடைந்த நாடுகளில் கல்வியில் பாண்டித்தியம் பெற்றவர்களாலேயே பள்ளிமுன் கல்வி நெறிப்படுத்தப்படுகின்றது.

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரால் ஒழுங்குபடுத்தப்பட்ட பள்ளி முன்கல்வி ஆசிரியர்களுக்கான பயிற்சிக்கள அமர்வுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி இவ்வாறு தெரிவித்தார்.

தெல்லிப்பளைக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. சி. சிவமகாராசா தலைமையில் மேற்படி வைபவம் நடைபெற்றது.

கல்வி அதிகாரி திரு. ஆர். கே. குலசேகரம் உட்படப் பலர் உரையாற்றினர் (க 119

## சுன்னாகம் கதிரமலைசிவன் கோயில்திருவிழா

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானத்தின் பஞ்சகுண்டயாக மகோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்ற விழாவுடன் ஆரம்பிக்கின்றது.

தேர்த்திருவிழா மே 4 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் தீர்த்த உற்சவம் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை நடைபெறும். பூங்காவனக் காட்சி 7 ஆம் திகதி மாலை இடம்பெறும். [க]



ஒரு முறை நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் மிம்பர்படிகளில் ஏறும்போது வழமைக்கு மாறாக மூன்று படிகளிலும் 'ஆமீன்' என்றார்கள். இதனைக் கேட்ட ஸஹாபாக்கள், நபிகள் (ஸல்) அவர்கள் மிம்பர் மேடையை விட்டிறங்கியதும் காரணம் கேட்டார்கள். அதற்கு [ஸல்] அவர்கள் பின்வருமாறு விடையளித்தார்கள். நான் முதலாம் படியில் கால் வைத்தபோது வானவர் ஜிப்ரயீல் [அலை] அவர்கள் வந்து எவர் ரமழான் மாதத்தைப் பெற்றும் அவரின் பாவங்கள் மன்னிக்கப்படவில்லையோ அவர் நாசமடையட்டும் என்றார் நான் அப்படியே ஆகுக என்றேன் இரண்டாம் படியில் ஏறும்போது எவர் எனது (முஹம்மத்) பெயரைக் கேட்டு அதற்கு ஸலவாத் சொல்லவில்லையோ அவரும் நாசமாகட்டும் என்றார். நான் அப்படியே ஆகுக என்றேன். மூன்றும் படியல் ஏறும்போது எவர் தன் பெற்றோர் முதியவராயும் அவர்கள்மீது கருணை காட்டுவதால் சுவர்க்கம் நுழையவில்லையோ அவரும் நாசமாகட்டும் என்றார். அதற்கும் நான் அப்படியே ஆகுக என்றேன்.

ஸஹர் முடிவு 4.24
நோன்பு திறக்கும் நேரம் 6.20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்படப்பிரதிகளை
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள்
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

26 - 04 - 1989 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
நெகட்டிவ் [Processing] செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள்
Kodak Fuji Konica
Tudor Forte B/W
பெற்றுகொள்ள நாடுங்கள்

# நோய் கட்டுப்படுத்தப்பட்டவுடன் இறைச்சி விற்பனைத்தடை நீக்கம்

## ஒத்துழைப்பு வழங்கக் கோருகிறார் உதவி ஆணையாளர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

தற்போது கால்நடைகளுக்குப் பரவி வரும் நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டவுடன் இறைச்சி விற்பதற்கான தடை தளர்த்தப்படும். நாம் எல்லோரும் ஒத்துழைத்து எமது கால்நடை வளத்தைப் பாதுகாப்போம்.

யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலால யாழ் மாவட்ட பொதுமக்களுக்கு பத்திரிகை மூலம் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடமாகாண கால்நடை வைத்திய உதவிஅத்தியட்சகர் எம்மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி என்ற கொடிய தொற்று நோயும், கால்வாய் நோயும் பரவியுள்ளதாகவும், இத் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு இறைச்சிக்கடைகளை மூடி உதவும்படியும் என்னைக் கேட்டுக் கொண்டார்.

இதன் பிரகாரம், இம்மாவட்டத்தி இறைச்சி விற்பனை தடைசெய்யப்பட்டது.

இவ்வாறு தடை செய்வதற்கு முக்கிய காரணங்கள் பின்வருமாறு:-

1. நோயுற்ற கால்நடைகளை இறைச்சிக்காக அறுவை செய்வதைத் தடுத்தல்;

2. நோய்க்கிருமி (வைரசு) யுடன் கலக்கப்பட்ட இறைச்சியைப் பாவனையாளருக்கு உணவுக்கு விற்பனை செய்வதைத் தடுத்தல்;

3. வெளி மாவட்டங்களிலிருந்து கால்நடைகளைக் கொண்டுவருவதையும் மாவட்டத்தினுள் கால்நடைகளை அறுவைக்காகக் கொண்டுசெல்வதையும் தடை செய்வதன் மூலம் இத்தொற்று நோய்கள் மேலும் பரவாமல் தடுத்தல்.

எம் மக்களைப் பொறுத்தவரையில் கால்நடை ஒரு வளம்; எம் மக்களுடைய பொருளாதார வாழ்க்கையில ஒரு முக்கிய துறையும் ஆகும்.

இவ் வளத்தைப் பாதுகாக்க வேண்டியதும், வளர்க்கவேண்டியதும் எம் எல்லோருடைய பொறுப்பாகும்.

இந்தக் கோமாரிநோய் கால்நடைகளிடையே மரணத்தை ஏற்படுத்தும் ஓர் அபாயகரமான தொற்றுநோய்.

இத் தொற்றுநோயின் அறிகுறிகளான, காய்ச்சல், கண்ணிலிருந்து நீர் அல்லது சீழ் வடிதல், உணவு உட்கொள்ளாமை, வாயில் புண்காணப்படுதல், நுரையுடன் வீணீர் வடிதல், தொடர்ச்சியான வயிற்றோட்டம் முதலியவை கால்நடைகளில் காணப்பட்டால் உடனடியாக அண்மையிலுள்ள கால்நடை வைத்தியரிடம் தொடர்புகொள்ளவும்.

இத் தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் ஏற்கனவே கால்நடை வைத்தியர்களினல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நோய் ஏற்படாத கால்நடைகளுக்கும் கோமாரித் தடுப்பூசி இலவசமாக ஏற்றும் நடவடிக்கை அவசரமாக நடைபெறுகிறது.

கால்நடை வைத்திருப்போர், தங்கள் பகுதி கால்நடை வைத்தியருடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு கால்நடைகளுக்குத் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும்.

அத்துடன் கால்நடைகளை ஓரிடத்திலிருந்து வேறோர் இடத்திற்குக் கொண்டு செல்வதையும் அவற்றை வாங்குவதையும் விற்பதையும் தற்காலிகமாகத் தவிர்த்துக் கொள்ளல் மிகவும் அவசியம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ)

## வட இலங்கை மருத்துவ மாணவர் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

வட இலங்கை மருத்துவக் கல்லூரியின் மாணவர் சங்கப் பிரதிநிதிக் கோஷ்டி ஒன்று இன்று 26 ஆம் திகதி கொழும்பு செல்கிறது.

இக் கல்லூரிக்கு அரச அங்கீகாரம் பெறுதல் முதலிய விஷயங்கள் பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இக் கோஷ்டியினர் பேச்சுவார்த்தை நடத்துவர். (க)

## அமெரிக்க புத்தகங்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

அமெரிக்கத் தூதுவரால் யாழ் மாநகர சபை நூலகத்துக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட ஆறு லட்சம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் நல்லூரில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் பொதுமக்களின் பார்வைக்கு தற்போது வைக்கப்பட்டுள்ளன. 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை காலை 8.30 முதல் மாலை 5.00 மணிவரை மக்கள் இவற்றைப் பார்வையிடலாம். (ச)

## பிரயாண ஒழுங்குகள்

ஜெர்மனி செல்ல விரும்புவோர் 25 வயதுக்குட்பட்டோர் [தோற்றத்தில் சிறியோராக இருத்தல் விரும்பத்தக்கது] உடனடியாகப் பயணம் மேற்கொள்வதற்கும் மற்றும் குவைற் Cleaners ற்கும் வெற்றிடங்கள் உண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

சுஜேரா ரவல்ஸ்
21, வேம்படி ரோட்,
யாழ்ப்பாணம். (C/2336)

★ ரெருசோ ★
மூலப்பொருள்கள் விற்பனை

* வெளிநாட்டு சிப்ஸ்
* கலர் பவுடர் வகைகள்
* வெள்ளைச் சிமெந்து
* மற்றும் தேவையான பொருள்கள்

ரெருசோ மாபிள் பதிக்கும் வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

மாபிள்ஸ்
281-D, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C/2333)

## கரவெட்டி---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
ருந்த பெண்களைத் தாக்கிய போது அவர்கள் கூக்குரலிடவே அப்பகுதியில் குண்டு ஒன்று வெடிக்க வைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது,

பிரஸ்தாப ''ஆங்கிலம்'' பேசும் கொள்ளையர்கள் கறுப்புத் துணிகளால் தமது முகங்களை மூடி மறைத்திருந்தனர் என்றும் அவர்களில் ஒருவர் ''குடுமி'' வைத்திருந்தார் என்றும் பொருள்களைப் பறிகொடுத்தவர்கள் கூறியுள்ளனர்.

இச்சம்பவங்கள் தொடர்பாக அமைதிப்படையினரிடம் முறையிடப்பட்டதாகவும், அவர்கள் அப்பகுதிகளைப் பார்வையிட்டுச் சென்றதாகவும் தெரியவருகிறது. (ஒ-70)

## 857 படையினர் ..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
இராணுவ வீரர்கள் காயமடைந்தனர் என்றும்— அறிவிக்கப்படுகிறது.

இத்தகவலை உள்துறை இணை அமைச்சர் சிந்தாமணி பாணிக்ரஹி இந்திய நாடாளுமன்றத்தில் வெளியிட்டார். [அ-எ]

## மீன் கறி....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
நிலையான புதுவாழ்வு நிலையத்தைச் சேர்ந்தவர்கள்.

ஆறு பேர்களது நிலைமை மிகவும் மோசமாக இருந்ததாகவும் தக்க சமயத்தில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படாதிருந்தால் உயிராபத்து ஏற்பட்டிருக்கும் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-51)

## இறைச்சிக் ...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
இருக்கும் என்று தெரிகிறது.

எச்சரிக்கையை தேசப் பிரேமி இயக்கத்தினர் தான் விடுத்தனர் என்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டால், மாட்டிறைச்சிக் கடைகள் தென் பகுதியில் நிரந்தரமாகவே மூடப்பட்டுவிடுமா? என்ற கேள்வியும் எழுந்திருக்கிறது.

## கிளிநொச்சியில் திங்கள்.....

தாவது:-

பழைய பஸ் நிலைய கந்தசுவாமி கோவிலடியில் 'எல்ப்' வான் ஒன்றில் வந்து இறங்கிய ஆயுதம் தாங்கிய கோஷ்டியினர் தொடர்ச்சியாக துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்து விட்டுச் சென்றுர்கள்.

இதனைத் தொடர்ந்து முகாம்களில் இருந்து தொடர்ந்து துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன. ஷெல்களும் அடிக்கப்பட்டன.

அமைதிப்படையினர் நகரப் பகுதிகள், திருநகர், கனகபுரம், பரவிப்பாஞ்சான் போன்ற இடங்களில் தேடுதலை மேற்கொண்டார்கள்.

அசம்பாவிதங்களின் போது இரண்டு அரச பஸ்கள் சேதமடைந்தன. சாரதியும், நடத்துனரும் காயமடைந்தனர்.

சம்பவத்தின்போது வதிரியைச் சேர்ந்த பாரத் (வயது 17) என்ற கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவனும், உமையாள்புரத்தைச் சேர்ந்த செங்கமலம் கனகம்மா (வயது 60) என்ற பெண்ணுமே கொலையுண்டவர்கள் ஆவார்.

சம்பவத்தில் 7 பேர் காயமடைந்தனர்.

ஆர். திலகர் (வயது 23) கிளிநொச்சி, பொ. புவனேந்திரன் (வயது 42) கொக்குவில், எஸ். நாகராசா (வயது 35 குமரபுரம், க. சிவராஜ) (வயது 15) 155 ம் கட்டை, குணம் சுரேன் (வயது 21) பரவிப்பாஞ்சான், எம். பூலோகநாதன் (வயது 28) பரவிப்பாஞ்சான், மகேசன் (வயது 40) சங்கானை ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

இரவு முழுவதும் இடையிடையே துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணமிருந்தன. [அ-ரி-163-9]

## நிறைவேறியது

பிரஜா உரிமை பெற்ற இந்திய வம்சாவளியினருக்கு வாக்குரிமை வழங்கும் சட்ட மூலம் நேற்று நாடாளுமன்றத்தில் 75 அதிகப் பெரும்பான்மை வாக்குகளினல் நிறைவேற்றப்பட்டது.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கிறேஸ் அருளானந்தம்

(கிறேஸ் ரீச்சர்)

சில்லாலையைச் சேர்ந்தவரும் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி ஆசிரியையுமான திருமதி கிறேஸ் அருளானந்தம் அவர்களின் இறுதிச்சடங்குகள் வியாழக்கிழமை (27-4-89) பிற்பகல் 3-30 மணிக்கு சில்லாலையில் இடம்பெறும்.

குடும்பத்தினர்:

சில்லாலை,
பண்டத்தரிப்பு. (10676)

## கார்த்திகேசு யோகசுந்தரம்

(B. A., LL. B., சட்டத்தரணி)

கொழும்பு விவேகானந்த ம.வித்தியாலய முன்னுள் ஆசிரியரும், கொழும்பு சட்டத்தரணியுமாகிய கார்த்திகேசு யோகசுந்தரம் (B. A., LL. B.) 16-4-1989 ஞாயிற்றுக்கிழமை சென்னையில் காலமானுர். அன்னர் வைத்திலிங்கம் கார்த்திகேசு - நாகமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் கமலாதேவி (ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவனும், அன்பழகன் (யாழ். இந்துக் கல்லூரி), அருளொளி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற முன்னுள் ஆசிரியர் கணபதிப்பிள்ளை சிவசம்பு, முன்னுள் ஆசிரியை திருமதி சிவசம்பு ஆகியோரின் அருமை மருமகனும், காலஞ்சென்ற சோமசுந்தரம், தங்கபூரணம், விஜயசுந்தரம், உருத்திரசுந்தரம் (வட பிராந்திய போக்குவரத்துச் சபை, யாழ். சாலை), சௌந்தரம், யோகராசா (சிங்கப்பூர்), தியாகராசா (சவுதி), சோமசுந்தரம் (சவுதி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கமலநாதன் (கல்வி அதிகாரி, கிளிநொச்சி), கமலாதேவி, கண்ணகாதேவி (யாழ். பல்கலைக்கழகம் - சித்த மருத்துவ பீடம்), காத்தலிங்கம், பத்மாவதி, விமலாதேவி, சுகி ஆகியோரின் அருமை மைத்துனருமாவார்.

அன்னரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று 26-4-89 பி. ப. 3-00 மணிக்கு அன்னரின் சாவகச்சேரி, சங்கத்தானை இல்லத்தில் நடைபெறும்.

(273)

## சிவகாமிப்பிள்ளை (இன்னுமணி) துரைரத்தினம்

மானிப்பாய்தெற்கைச் சேர்ந்த திருமதி இன்னுமணி துரைரத்தினம் காலமானுர். அன்னர் காலஞ்சென்ற துரைரத்தினம் (ஓய்வுபெற்ற கலால் அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும், செல்வராணி (அவுஸ்திரேலியா) ஞானம்பிகை, சிறீபத்மநாதன் (ஓய்வுபெற்ற குதமுகாமையாளர், கலால் பகுதி யாழ்ப்பாணம் மனோரஞ்சிதம் (றூபி) அருளானந்தன் புகையிரதப்பகுதி) மகேந்திரன் நில அளவையாளர்) பத்மாவதி (றதி) (ஆசிரியை வைத்தீஸ்வர வித்தியாலயம்), சிதாலக்சுமி, விமலா (கனடா) பவானி ஆகியோரின் அன்புத் தாயாரும், சோமசுந்தரம் (நேசரத்தினம் - ஓய்வுபெற்ற நீர்ப்பாசன பொறியியலாளர்) செல்வரத்தினம் (ஓய்வு பெற்ற பொலீஸ் அதிகாரி), பத்மாமதி, காலஞ்சென்ற நாகேந்திரா, புஸ்பவதி, பரமேஸ்வரி, காலஞ்சென்ற சந்திரபால், குமரேசன் (கிறின் லேஸ் வங்கி) ஜேம்ஸ் சிவரத்தினம் (கனடா) ஸ்கந்தகுமார் (கொங் கொங் & சங்காய் வங்கி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். ஈமக்கிரியைகள் அன்னரின் இல்லத்தில் 26-4-89 புதன் பி. ப. 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
T. சிறீபத்மநாதன்

'அருள் பதி'
லோட்டன் வீதி, மானிப்பாய். (10681)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னப்பு கனகம்மா

காலஞ்சென்ற சின்னப்புவின் அன்பு மனைவி கனகம்மா (அரசாங்க வயோதிப இல்லம் கைதடி-ஒய்வுபெற்ற ஊழியர்) காலமாகிவிட்டார். அன்னர் நடராசா (சவூதி), தயல்நாயகி, தவமணிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் ராம்சிங் (கொழும்பு) சண்முகநாதன், வசந்தராதேவியின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னரின் பூதவுடல் இன்று 26-4-89 புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு 198/9 பொன்னப்பாலேன் யாழ்ப்பாண இல்லத்தில் இருந்து தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல்மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

198/9 பொன்னப்பா லேன்,
யாழ்ப்பாணம். (271)

## திருமதி இராசம்மா செல்லையா

புங்குடுதீவு - 10

பொரளை பிரபல வர்த்தகர் காலஞ்சென்ற திரு. நா. கி. செல்லையா அவர்களின் துணைவியார் திருமதி இராசம்மா காலமானுர். இவர் திருமதி கண்ணம்மா தல்லதம்பியின் சகோதரியும் விவேகானந்தன் [S.K.C. கொழும்பு], சத்தியமூர்த்தி [இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்] சுதந்திரதேவி, ஈஸ்வரமூர்த்தி [ஆசிரியர் புங்குடுதீவு மகாவித்தியாலம்], பாரததேவி, பாஸ்கரமூர்த்தி [அவுஸ்திரேலியா), தயாபரமூர்த்தி (சோகிலா றைஸ் மில் கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத்தாயாரும், கிருபானந்தன் [S. L. P. S. கொழும்பு], முத்துலிங்கம் [கீர்த்தி பன்ளிகுட்ஸ் திருநெல்வேலி], தயாளமணி, கோகிலா, சுசிலாதேவி, சாந்தி [அஸ்திரேலியா] ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 26-4-89 புதன்கிழமை [இன்று] காலை 10.00 மணியளவில் சுண்டிக்குளியிலும், தகனக்கிரியைகள் துண்டிமயானத்திலும் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொளளவும்.

பிள்ளைகள்

43/1 மொறிஸ்லேன்
கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி. [269]

## திரு. S.V. பொன்னுத்துரை

[ஓய்வுபெற்ற P. W. D. ஓவசியர்]

ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வேலுப்பிள்ளை பொன்னுத்துரைஅவர்கள் 25-04-89 செவ்வாய்கிழமைஅதிகாலை காலமானுர். அன்னர் காலஞ்சென்ற குமாரு கந்தையாவின் அன்பு மகள், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், பதிசங்கர் (ராஜஸ்-சுவிஸ்), பதிக்குமார் (ரஞ்சன்-சுவிஸ்), பிரபாகரன் (கண்ணன்), பதிசக்தி, மேகலாதேவி, மனோகரி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னரது ஈமக்கிரியைகள் இன்று [26-04 89] புதன்கிழமை 2.30 மணியளவில் 290, கண்டிவீதி, கச்சேரியடி, யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ் வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பொன்னுத்துரை (மனைவி), பிள்ளைகள்

290, கண்டி வீதி.
யாழ்ப்பாணம். [270]

## பிலிப்பையா சம்மாட்டியார்

(பலாலி)

பலாலியைச் சேர்ந்த பிலிப்பையா சம்மாட்டியார் காலமாகிவிட்டார். இவர் விக்ரோறியாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஜேசலின், மரியதாஸ், பெனடிக்ற், ஜெறூட், மாகிறெற், யசிந்தா, புஷ்பமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், மனுவேற்பிள்ளை, திரேசம்மா, டெய்சி, மல்லிகா, இரத்தினம், ஞானரட்ணம், செல்வா ஆகியோரின் மாமனும் சந்தானு, ஜெயரட்ணம், அருட்செல்வன், றெக்ஸ், றஜீனு, சித்திரா, வசந்தா, பெனெற், யஸ்ரின், கரோலின், கவிதா, சங்கீதா, ஜீவிதா, சியாமளா, ஆனந், பிரேம்குமார், பொபி, பொபிதா, பென்ஹேர், கிறிஸ்ரா ஆகியோரின் பாட்டனுமாவார்.

அன்னரின் இறுதி ஊர்வலம் பலாலியிலிருந்து 26-4-89 புதன்கிழமை பிற்பகல் 3. 00 மணிக்குப் புறப்பட்டு, மயிலிட்டி புனித காணிக்கை மாதா ஆலயத்தில் நடைபெறும் இரங்கற் திருப்பலியைத் தொடர்ந்து நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
பி. பெனடிக்ற்,
(மகன்)

பலாலி.
வசாவிளான். (10680)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினல் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 26 — 04 — 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org